(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 சனவரி 24 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2020 பெப்ரவரி 05, புதன்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 10 ஆம் திகதிய 2131/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2135/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2135/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2145/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பெர் 01 ஆம் திகதிய 2151/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2020 பெப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

15/2020

கௌரவ புத்திக பத்திரண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஹெரோயின் போதைவஸ்து சம்பந்தமான தவறுகளுக்காக கைதுசெய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) கூடுதல் எண்ணிக்கையான ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி இரண்டு வருடங்களில் ஹெரோயின் தவறுகளுக்காக கைது செய்யப்படுகின்ற போக்கு சனத்தொகையில் ஒரு இலட்சத்தில் எத்தனை பேர் என்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களில் பாரியளவில் ஹெரோயினைக் கொண்டுவருதல் மற்றும் விநியோகத்தை மேற்கொண்ட ஆட்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டுக்கு ஒரு வருடத்தில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்படுவதாகக் கருதப்படுகின்ற மதிப்பீடு செய்யப்பட்ட ஹெரோயினின் அளவு யாது என்பதையும்;

(ii) இந்நாட்டுக்கு ஹெரோயின் கொண்டுவரப்படுகின்ற வழிமுறைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வழிமுறைகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) எந்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு அதிகமாக ஹெரோயின் கொண்டுவரப் படுகின்றதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

56/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுச் சங்கங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டுச் சங்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டுச் சங்கங்களில் தற்போது வருடாந்த கணக்குகளைச் சமர்ப்பித்துள்ள மற்றும் சமர்ப்பிக்காத சங்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரை வருடாந்தம் அலுவலர் தெரிவுக்கான தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ள மற்றும் நடாத்தப்படாதுள்ள சங்கங்கள் யாவை என்பதையும்;

(v) வருடாந்தம் அலுவலர் தெரிவுக்கான தேர்தல்களை நடத்தாத சங்கங்களின் அலுவலர் தெரிவுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

83/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினம் நிறைவுற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறு பங்கேற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் உத்தியோகத்தர்களது எண்ணிக்கை மற்றும் அவர்களது பெயர்கள் யாவை;

(ii) மேற்குறிப்பிட்ட போட்டியில் இலங்கை வென்றெடுத்த கேடயங்களின் எண்ணிக்கை மற்றும் குறிப்பிட்ட கேடயங்களை வென்றெடுத்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளது பெயர்கள் யாவை;

(iii) மேற்படி விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு நிதிசார் அன்பளிப்பினை வழங்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதா;

(iv) ஆமெனில், இதுவரை நிதிசார் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களது பெயர்கள் யாவை;

(v) இதுவரையில், நிதிசார் அன்பளிப்புகள் வழங்கப்படாதுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இந்த அன்பளிப்புக்களை விரைவில் வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

94/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் கையகப்படுத்தியுள்ள காணியின் அளவு யாது;

(ii) அவ்விதமாக கையகப்படுத்தியுள்ள காணிகள் எந்நிறுவனங்களுக்குச் சொந்தமான இருந்தன;

(iii) மேற்படி நிலப்பரப்புகள் கையகப்படுத்தப்பட்ட திகதி யாது;

(iv) காணிகளுக்காக செலுத்தப்பட்ட பெறுமதிகள் மற்றும் அப்பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறையியல் யாது;

(v) தற்போது மேற்படி காணிகளில் உள்ள தென்னஞ் செய்கையின் பராமரிப்பு மற்றும் விளைவுகளை பெற்றுக்கொள்ளலை மேற்கொள்கின்ற நிறுவனம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

114/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தியோகபூர்வ இலக்கம் 31470 கொண்ட பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு.எல்.பீ.யூ. கருணாரத்ன 1990.11.04 ஆம் திகதி பொலிஸ் சேவையில் இணைந்து களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பப் பயிற்சியை பெற்றுக்கொண்டிருக்கையில் 1991.03.04 ஆம் திகதி முதல் இவரின் நியமனம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அந்நியமனத்தை இரத்து செய்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) இவரின் மேன்முறையீட்டினை பரிசீலனை செய்து 1997.04.11 ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வ இலக்கம் 12271 இன் கீழ் இவர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இவரின் நியமனம் இரத்து செய்யப்பட்டிருந்த 06 வருட காலத்தில் இவருக்கு கிடைக்கவேண்டிய பதவியுயர்வு கிடைக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) அக்காலம் தொடர்பில் அவருக்குரித்தான நிலுவைச் சம்பளத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vi) இவரின் பிறந்த திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

121/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 70 வயதுக்கு மேற்பட்ட பிரசைகளுக்கு செலுத்தப்படுகின்ற முதியோர் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்துள்ள பலருக்கு இற்றைவரை அக் கொடுப்பனவு கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) இது தொடர்பாக பிரதேச செயலகங்களிடம் வினவும் போது தற்போது கொடுப்பனவை பெறுகின்றவர்களில் ஏற்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் எஞ்சியோருக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விடயத்துக்கு பொறுப்பான தற்போதைய அமைச்சர், அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள நிலையில் இதுவரை அக்கொடுப்பனவு கிடைக்காத முதியோர்களுக்கு அக்கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இந்த கௌரவ சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

127/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான,

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை;

(iii) கைத்தொழில்பேட்டைகளில் இயங்கிவருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில்புரிகின்றவர்களின் எண்ணிக்கை;

என்பவற்றை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மத்திய மாகாணத்திற்காக,

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள்;

(ii) மேற்படி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட இடங்கள்;

(iii) வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள்;

(iv) நன்மைபெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை;

(v) மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள்;

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நிகழ்காலத்தில் இணையத்தளத்தின் ஊடாக இலத்திரனியல் வியாபார முயற்சிகளை மேற்கொள்ளும் ஆற்றல் கிராமிய பிரதேசங்களில் வசிக்கின்ற ஆட்களுக்கும் திறந்ததாக உள்ளபோதிலும் அதற்கு அவசியமான அறிவு போதுமான அளவில் வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) இந்த அறிவினை முறைசார்ந்தவகையில் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

133/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.18 தொடக்கம் 2017.07.31 வரையான காலப்பகுதியில் இலங்கை கனிய மணல் கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்ட ஆலோசகர்கள், இணைப்பாளர்கள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர்களின்;

(i) பெயர்கள்;

(ii) கல்வித் தகைமைகள்;

(iii) தொழில்சார் தகைமைகள்;

(iv) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்;

(v) பணியாட்டொகுதி வசதிகள்; மற்றும்

(vi) வாகனங்கள் உள்ளிட்ட ஏனைய வசதிகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

16/2020

கௌரவ புத்திக பத்திறண,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயங்கிவருகின்ற சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் மூலம் தேசிய மின்சக்திக் கட்டமைப்புக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவு விகிதாசார அடிப்படையில் யாது என்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்களின் ஊடாக இடம்பெறுகின்ற சுற்றாடல் தாக்கங்கள் பற்றிய கற்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை மேற்படி கற்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017 ஆம் ஆண்டில் புதிய சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) புதிய உரிமப்பத்திரங்களை வழங்கும் போது மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களின் விதப்புரைகளைக் கவனத்தில் கொள்ளும் முறையியல் ஒன்று தயார் செய்யப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

57/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுச் சங்கங்களுக்கு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதிக்குள் குறித்த விளையாட்டுச் சங்கங்கள் சர்வதேச போட்டிகளுக்கு விளையாட்டு வீரர்களை கலந்துகொள்ளச் செய்திருப்பின், அது பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சர்வதேசப் போட்டிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதிக்குள் விளையாட்டுச் சங்கங்களுக்கு வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்கள் அழைத்துவரப்பட்டிருப்பின், அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

84/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரவர்ஹோல் மன்றத்தின் தற்போதைய நிருவாக சபை அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மன்றத்தின் பிரதான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை ரவர்ஹோல் மன்றம் ஊடாக அமுல்படுத்தப்பட்டுள்ள நலன்புரி நிதியத்திலிருந்து பயன்களைப் பெற்றுக் கொண்டுள்ள கலைஞர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கலைஞர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகையை அதிகரிக்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

95/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளை அபிவிருத்தி செய்கையில் அகற்றப்படுகின்ற தென்னை மரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி தென்னை மரங்கள் எத்தரப்பினருக்கு வழங்கப்பட்டன ;

(iii) அதற்காக பாவித்த முறையியல் யாது ;

(iv) மேற்படி தென்னை மரமொன்று எவ்விலைக்கு வழங்கப்பட்டது;

(v) அப்பணம் எந்நிறுவனம் வசம் காணப்டுகின்றது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

115/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு மார்ச்சு 18 ஆம் திகதியன்று, கொழும்பு செங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்ற "நேர்மை திறன் மாநாடு" எனப்படும் அரச சேவையில் இலஞ்சத்தை ஒழிப்பதற்கான ஐந்தாண்டு திட்டத்தை வெளியிடுவதற்காக நடைபெற்ற விழாவை ஏற்பாடு செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அவ் விழாவுக்கு செலவான முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அவ் விழாவில் பங்கேற்ற அழைப்பு விருந்தினர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்கான செலவை ஏற்ற நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

122/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நடவடிக்கைகளுக்காக இலங்கையர் களுக்கு சனாதிபதி நிதியத்தின் மூலம் முழுமையான அல்லது பகுதியளவு புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்திற்கு அமைவாக இதற்காக தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை மற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) க.பொ.த. (உயர் தரத்தில்) அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) பட்டப்பின் படிப்பு கல்விக்காக பட்டதாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) தவிர வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(vii) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மேற்படி (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்ட முறையியல்களுக்கு புறம்பாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு புலமைப்பரிசில்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள், நிதித் தொகைகள், நிறுவனங்கள் மற்றும் வெளிநாடெனில், அந்நாட்டின் பெயர் ஆண்டுவாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

128/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புஸ்ஸல்லாவ நகரத்தில் அமைந்துள்ள பௌத்த மதவழிபாட்டு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மதவழிபாட்டு நிலையங்களின் பெயர்கள் யாவை;

(iii) நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்படி மதவழிபாட்டு நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 பெப்ரவரி 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

17/2020

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 யூலை மாதம் 07 ஆம் திகதி மட்டக்களப்பில் சனாதிபதி மற்றும் அமைச்சர்களின் தலைமையில் இடம்பெற்ற 96 ஆவது சர்வதேச கூட்டுறவுத்தின விழாவின்போது விருது வழங்கப்பட்ட சில ஆட்கள் தொடர்பில் நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) இதன் காரணமாக இவ்விருது விழாவின் நன்மதிப்பிற்கு பங்கம் ஏற்பட்டுள்ளதென்தையும்;

(iii) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இந்த ஊழல் பேர்வழிகளுக்கு விருது வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு நாட்டின் தலைவரையும் அமைச்சர்களையும் தவறாக வழிநடாத்தியிருக்கின்றார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) விருது பெற்றுக்கொண்ட தகைமையற்ற ஆட்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

(iii) அவ்விசாரணை மேற்கொள்ளும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

58/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆரம்ப, ஆங்கில, விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடங்களை கற்பிக்க அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது மேற்படி ஒவ்வொரு பாடத்திற்காகவும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

85/2020

கௌர ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆண்டு தொடக்கம் இற்றைவரை நிர்மாணிக்கப்பட்ட கலாசார நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கலாசார நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு கலாசார நிலையத்திற்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கலாசார நிலையங்கள் நிறுவப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இரத்தினபுரி மாவட்டத்தினுள் கலாசார நிலையங்களை கூடுதலாக நிறுவுவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

96/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தில் இற்றைவரை உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள முதலீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாது;

(iii) மேற்படி முதலீடுகளில் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

117/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஏப்ரல் மாதத்தில், இலங்கை விமானப் படையினால் ரேடார் ரிசீவரொன்றும் அன்டெனா ஸ்கேனரொன்றும் பழுதுபார்ப்பதற்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அப் பொருட்கள் காணாமல் போயுள்ளதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அப்பொருட்களை ஏற்றி இறக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அந் நிறுவனம் இன்னும் இலங்கையின் யாதேனுமொரு அரச நிறுவனத்துக்கு சேவைகளை வழங்குகின்றதா என்பதையும்;

(v) அப்பொருட்கள் காணாமல் போனதால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

124/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படையின் எயார் வைஸ் மார்ஷலாகப் பதவி வகித்த திரு.கே.ரீ.பீ.பீ.ஜயம்பதி அவர்கள் 2008.01.08 ஆம் திகதி சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டு தமது வாகனத்தை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளார் என்பதையும்;

(ii) குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு மீண்டும் சலுகை அடிப்படையில் வாகனமொன்றை இன்னும் 5 வருடங்களின் பின்னரே பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளபோதிலும் மேற்படி அனுமதிப்பத்திரம் பற்றிய தகவல்களைப் போலியாகக் குறிப்பிட்டு 2011.01.14 ஆம் திகதி முன்னாள் விமானப் படைத் தளபதியினதும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரினதும் விதப்புரைகளுடன் மீண்டும் சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்து 2011.06.07 ஆம் திகதி உரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ளார் என்பதையும்;

(iii) அதன் பிரகாரம் அவர் சுற்றறிக்கை நியதிகளை மீறியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) சுற்றறிக்கை நியதிகளுக்கு எதிராக சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை தருவிப்பதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு விதப்புரை செய்தமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கும் விமானப் படைத் தளபதிக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

129/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த இரண்டு வருடங்களுள் கண்டி மாவட்டத்தில்,

(i) மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சார்ந்த சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) போதைப்பொருள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(iii) கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி;

வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது தடைசெய்யப்பட்டுள்ள சட்டவிரோத போதைப்பொருள் வகையைச் சேர்ந்த போதைப்பொருள்களாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் அவை கொண்டுவரப்படும் நாடுகள் அடங்கிய பெயர் பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கண்டி மாவட்டத்தில், கம்பளை மற்றும் அண்மிய பிரதேசங்கள் நீண்ட காலமாக போதைப் பொருள்களை விநியோகிக்கும் மத்திய நிலையமாக இயங்கி வருவதையும், பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைத்து இயங்கி வரும் இந்த விநியோக வலையமைப்பு இதுவரையும் பலமான நிலையில் காணப்படுவதையும் அறிவாரா என்பதையும்;

(ii) இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களை விரைவாக சட்டத்தின்முன் நிறுத்தி, அப்பிரதேசத்திலிருந்து போதைப்பொருள்களை ஒழிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

135/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இலங்கைப் பிரசை அல்லாத ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இரட்டை பிரசாவுரிமையுடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

18/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. எஸ். எல். நஸீர் அவர்களுக்கு கடமை நடவடிக்கைகளுக்காக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாகனத்தின் வகை மற்றும் இலக்கம் யாதென்தையும்;

(iii) இன்றேல், அவருக்கு வாகனமொன்றிற்காக மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றதா என்தையும்;

(iv) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறித்த உத்தியோகத்தர் ஏனைய உத்தயோகத்தர்களின் வாகனங்களை தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்துகின்றார் என்பதையும்;

(ii) இது வார இறுதி நாட்களில் பரவலாக இடம்பெறுகின்றதென்தையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இவ்வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

60/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 மே மாதத்தில் எற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக சேதமுற்ற பௌத்த பன்சலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பன்சலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(iii) மேற்படி பன்சலைகளை மீளக் கட்டியெழுப்ப அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

86/2020

கௌரவ ஹேஷா விதானகே,— காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) 2005 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் அரச காணிகளை வழங்குகையில் பின்பற்றிய செயன்முறை யாதென்பதையும்;

(iii) ஏற்புடைய காலப்பகுதியில் காணிகளை பெற்ற பனயாளிகள் யாவர் என்பதையும்;

(iv) காணிகள் வழங்குகையில் பின்பற்றப்படும் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

97/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்ரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் புகுமுக வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனம் யாது;

(ii) மேற்படி ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டுள்ள முறையியல் யாது;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது ;

(iv) மேற்படி ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

118/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விமான சேவைகளை வழங்கியமைக்காக இலங்கை விமானப் படைக்கு அரச நிறுவனங்களிலிருந்து வருமதியாகவுள்ள நிலுவைத் தொகை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஒவ்வோர் அரச நிறுவனத்தின் பெயர், நிலுவையாகவுள்ள தொகை மற்றும் நிலுவையாகவுள்ள காலப்பகுதியை தனித்தனியாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இலங்கை விமானப் படை நிலுவைத் தொகையை அறவிட்டு கொள்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

130/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெற் நிறுவனத்தினால் கிரிக்கெற் உபகரணத் தொகுதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்ட கிரிக்கெற் உபகரணத் தொகுதிகளின் பெறுமதிகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) இப்பாடசாலைகளைத் தெரிவு செய்கையில் பின்பற்றுகின்ற அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(v) எதிர்காலத்தில் நாட்டில் கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு கிரிக்கெற் உபகரணத் தொகுதிகளை வழங்குவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

136/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டு உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.09.30 ஆம் திகதி உள்ளவாறு இராஜதந்திர நியமனங்களை பெற்றுள்ள இலங்கையின் பிரசைகள் அல்லாத ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) 2017.09.30 ஆம் திகதி உள்ளவாறு இராஜதந்திர நியமனங்களை பெற்றுள்ள இரட்டை பிரசாவுரிமையுடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 பெப்ரவரி 20, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

20/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) 2018 யூலை மாதம் 07 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு தின விழாவிற்கான உணவு வழங்கல் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்ட நிறுவனம் அல்லது ஆள் யார் என்பதையும்;

(ii) அதற்கென ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விழாவிற்கு உணவுகளை வழங்கும் பொருட்டு கேள்வி கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கென சமர்பிக்கப்பட்ட கேள்விகோரல்கள் எத்தனை என்பதையும்;

(v) அக்கேள்வி கோரல்களை முன்வைத்த நிறுவனங்கள்/ஆட்களினது பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உணவு வழங்கலை மேற்கொண்ட ரியாஸ் என்பவர் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளர் பதவியிலுள்ள ஒருவர் என்பதையும்;

(ii) உரிய முறையியல்கள் இன்றி அவர் இப்பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இது தொடர்பில் விசாரணையொன்று நடத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

61/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தின் போது எதிர்நோக்கிய இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவற்றின் போது இறந்துள்ள மற்றும் காணாமல் போயுள்ள ஆட்களின் எண்ணிக்கையும் நேர்ந்துள்ள சொத்துத் சேதங்களும் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

87/2020

கௌரவ ஹேஷா விதானகே,— உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பு பாடநெறிகளைப் பயில்வதற்காக வழங்கப்பட்டிருந்த வாய்ப்பினைக் குறைப்பதற்காக கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வெளிவாரி பட்டப்படிப்பு பாட நெறிகளுக்காக இணைத்துக் கொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பயிலும் பட்டப்படிப்பு பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iv) வெளிவாரிப் பட்டதாரிகள் உருவாக்கப்படுவதனை மேலும் அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

98/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய எற்றுமதி தயாரிப்பு வலயத்தின் புகுமுக வீதியை நிர்மாணிக்கையில் சேதமுறுகின்ற ஆதனங்கள் மற்றும் கையகப்படுத்துகின்ற காணிகளுக்கு நட்டஈடு வழங்குதல் இடம்பெறுகின்றதா;

(ii) ஆமெனில் நட்டஈடு பெறுநர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நட்டஈட்டின் அளவு யாது;

(iv) இன்றளவில் இது சம்பந்தமாக ஏதேனும் கொடுப்பனவு இலங்கை முதலீட்டுச் சபையினால் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில் அதன் அளவு யாது;

(vi) மேற்படி செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

125/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 150,000/- சலுகை விலைக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி மோட்டார் சைக்கிள்களை வழங்குகையில் எவ்விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுத்தவில்லை என்பதையும்;

(iii) ஆயினும் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ரூபா 150,000.00 - ரூபா 200,000.00 இடைப்பட்ட பணத்தொகையைச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அப்பணத்தொகையைச் செலுத்தும்வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்படமாட்டாதென அவர்களின் சேவை நிலையங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) இதற்கிணங்க இளைப்பாறிய பெருந்தொகையான பொலிசு உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஓய்வூதியம் கிடைக்காமையால் நிர்க்கதி நிலையிலுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும் பொருட்டு தாமதமின்றி பொருத்தமான முறையியலொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

131/2020

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பணிகள் யாவை என்பதையும்;

(iii) நுகர்வோர் அலுவல்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற எவ்வாறான குற்றங்கள் தொடர்பாக மேற்படி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க முடியுமென்பதையும்;

(iv) அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட,

(i) சுற்றி வளைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கையும் அவை மேற்கொள்ளப்பட்ட இடங்களும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நீண்ட தூர சேவைகள் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற அநேகமான உணவகங்களில் அதிக விலைக்கு உணவுகளை விற்பதோடு தரக்குறைவான உணவுகளை விற்பதாகவும், இதனால் நுகர்வோர் தெரிவு வரையறுக்கப்பட்டிருப்பதனால் நுகர்வோர் பெரிதும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

134/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் வெற்றிடம் ஏற்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப இது வரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

137/2020

கௌரவ (வைத்திய) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்புக்கு வெளியிலான அதிவேக வீதி மற்றும் மத்திய அதிவேக வீதி ஆகிய அதிவேக வீதிகள் இரண்டிலும் ஒவ்வொரு படிமுறையும்,

(i) ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

(ii) தூர அளவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) சாத்தியவள ஆய்வினை மேற்கொண்ட கம்பெனிகள் மற்றும் அதனை மேற்கொண்ட வருடம் யாது என்பதையும்;

(iv) ஆரம்ப மதிப்பீட்டு செலவு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(v) பெற்றுக்கொண்ட கடன்தொகையின் அளவு, வட்டி மற்றும் மீள செலுத்தும் காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) அக்கடன்களை பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vii) கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொண்ட அல்லது தற்போது மேற்கொள்கின்ற கம்பெனிகள் யாவை என்பதையும்;

(viii) நிர்மாணிப்பதற்காக செய்யப்பட்ட செலவு அல்லது செலவாகும் என எதிர்பார்க்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ix) ஒரு கிலோமீற்றருக்காக செய்யப்பட்ட செலவு அல்லது செலவாகும் என எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

21/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் வருடத்தில் சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் இலங்கை சுங்கத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கைப்பற்றப்பட்ட வாகன உதிரிப்பாகங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வாகன உதிரிப்பாகங்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) அவ்வாறான சட்டவிரோத நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறான சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இங்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாகன உதிரிப்பாக உற்பத்தியை கைத்தொழில் துறையாக இந்நாட்டில் விரிவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

62/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னர், வானிலை பற்றி கற்பதற்காக வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்கள் சென்ற நாடுகள் மற்றும் குறிப்பிட்ட பாடநெறியின் பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பயணங்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பயணங்களின் மூலம் நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

88/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996 கிரிக்கட் உலகக் கிண்ணம் வெற்றியீட்டப்பட்ட போது அச்சந்தர்ப்பத்தில் இலங்கை கிரிக்கட் சபையின் தலைவர் யார் என்பதையும்;

(ii) அன்று முதல் இதுவரை கட்டுப்பாட்டுச் சபைக்கு நியமனம் பெற்றுள்ள தலைவர்கள் மற்றும் அவர்களின் நிருவாகக் காலஎல்லைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி நிருவாகக் காலஎல்லைகளுக்குள் இலங்கை அணி பங்கேற்ற டெஸ்ட், ஒருநாள் 50 ஓவர் மற்றும் 20 ஓவர் போட்டிகளின் எண்ணிக்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி போட்டிகளின் வெற்றி, தோல்வி மற்றும் பெறுபேறுகள் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கிரிக்கட் உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியுள்ள ஒரு நாடாக உள்ள போதிலும் நிருவாக குறைபாடுகள் காரணமாக தற்போது இலங்கையின் கிரிக்கட் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மீண்டும் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்துவதற்கு மற்றும் வெற்றிகளை அடைந்துகொள்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் எடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

99/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் ஆரம்பப் படிமுறைக்காக நீரைப் பெற்றுக்கொள்வதற்காக செலவாகின்ற பணத்தொகை யாது;

(ii) மேற்படி ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதி யாது;

(iii) அதற்கான காலப்பகுதி யாது;

(iv) அதன் நிர்மாணப் பணிகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

126/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட துல்ஹிரிய பிடவைத் தொழிற்சாலை முதலில் பொம்பே ரெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பின்னர் மேற்படி கம்பனியினால் இது கொரியக் கம்பனியொன்றான காபுல் லங்கா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(iii) காபுல் லங்கா கம்பனியினால் இது வாஸ் கோல்டன் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட போது ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் நட்டஈடு செலுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனம் விற்பனை செய்யப்பட்டிருப்பது ஊழியர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் உட்படவாகும் என்பதையும்;

(v) அச்சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த ஊழியர்களுக்கு, எந்தவொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(vi) இலங்கை முதலீட்டுச் சபை தற்போது இந்த வாசஸ்தலங்களில் வசித்துவருகின்ற ஆட்களை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கும் போது இந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நட்டஈட்டைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் சுமார் 40 வருடங்கள் வசித்துவருகின்ற ஆட்களை மேற்படி வாசஸ்தலங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து வீடுகளின் உரித்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

132/2020

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலையில், குருநாகலையிலிருந்து கலகெதர வரையில் நிர்மாணிக்கப்படும் பகுதியின்,

(i) ஒட்டுமொத்த தூரம்;

(ii) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு;

(iii) உட்பிரவேச மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்படும் இடங்கள்;

(iv) நிர்மாணப்பணியை ஆரம்பிப்பதற்கும் நிறைவுசெய்வதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ள திகதிகள்;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிவேக நெடுஞ்சாலையின் மேற்குறிப்பிட்ட பகுதிக்காக இதுவரையில்,

(i) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(ii) செலுத்தப்பட்டுள்ள மொத்த நஷ்டஈட்டுத் தொகை;

(iii) செலுத்தப்படவுள்ள நஷ்டஈட்டுத் தொகை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

138/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் இதுவரை வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட எழுச்சிக் கிராமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு எழுச்சிக் கிராமத்திலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வீடுகளை நிர்மாணிப்பதற்கு கடன் அல்லது உதவியாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக செலவிடப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இவ் வீடமைப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் விழாக்களுக்கு செலவிடப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதில் பிரச்சார நடவடிக்கைகளுக்கான செலவுகள் எவ்வளவென்பதையும்;

(iv) அடுத்து வரும் ஆண்டுகளில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?